**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2026 இன்**

**அசல் வழக்கு எண்.113/2020**

முத்துகுமார் .... மனுதாரர்/4 ம் பிரதிவாதி

// எதிர் //

1) சுயம்புகனி .... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2) ருக்மணி அம்மாள்
3) பொன்சரவணன்
4) கணேசன் .... 2 முதல் 4 ம் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 26.03.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. சீனிவாசன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. கல்யாணகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சப்படுத்தப்பட்டும், 3 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. பெருமாள் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.....

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.04.10 18:45:58 +0530

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/4 ம் பிரதிவாதி, எதிர்வழக்குரையோடு தாக்கல் செய்துள்ள 29.11.2017 ம் தேதியிட்ட அசல் கிரைய ஆவணத்தை திரும்ப பெற வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 13 விதி 9(1) மற்றும் 151 சி.பி.சி.ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் 4 ம் பிரதிவாதி என்றும், வாதி அசல் வழக்கின் வழக்குரை சொத்தில் 1/2 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி கைத்தடி ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோரியுள்ளார் என்றும், ஆனால் அவ்வாறு கைத்தடி ஆவணத்தை வழக்குரையோடு சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்குரை சொத்தை 2 ம் பிரதிவாதி பொன் சரவணன் என்பவரிடம் இருந்து 29.11.2017 ம் தேதியில் தான் கிரையம் பெற்றதாகவும், வழக்குரை சொத்திற்கு 4 ம் பிரதிவாதி தான் முழு உரிமையாளர் என்றும், அவரின் அனுபவத்தில் தான் உள்ளது என்றும், 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதியின் தாயார் என்றும், 1 ம் பிரதிவாதியின் சகோதரி தான் வழக்கின் வாதி என்றும், வாதிக்கு பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றும், தனது பெற்றோர்களின் இதர சொத்துக்களை அசல் வழக்கில் சேர்க்கவில்லை என்றும், ஏனைய சகோதர, சகோதரிகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றும், தனது வழக்கை நிரூபிக்கும் வகையில் 29.11.2017 ம் தேதிய கிரைய ஆவணத்தை எதிர்வழக்குரையுடன் சேர்த்து

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.04.10 18:46:04 +0530

தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்கண்ட ஆவணம் இரண்டாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட ஆவணத்தின் சான்றிட்ட நகலை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கின் தன்மையின் படி, அசல் ஆவணம் தேவையில்லை என்றும், மேற்கண்ட கிரைய ஆவணத்தை வைத்து மனுதாரர் கடன் பெறப்போவதாகவும், கடன் கொடுப்பவர் அசல் ஆவணத்தை பார்வையிட வேண்டி ஆவணத்தை கேட்பதாகவும், எனவே மேற்கண்ட ஆவணம் தேவைப்படுவதாகவும், நீதிமன்றம் உத்தரவிடும் போது மேற்கண்ட ஆவணத்தை சமர்ப்பிக்க தயாராக இருப்பதாகவும், எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) <u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் கோரும் பரிகாரம் எதுவும் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், மனுதாரர்/4ம் பிரதிவாதி வழக்கு தபசில் சொத்துக்களின் ஒரு பகுதியை விற்பனை வில்லங்கங்கள் செய்ய முயற்சி செய்து வருகிறார் என்றும், அதுவகைக்கே மனுதாரர்/4 ம் பிரதிவாதி, எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள 29.11.2017 நாளிட்ட கிரைய ஆவணத்தின் அசலை திரும்ப பெறக் கேட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் குறித்தானது என்பதால் தபசில் சொத்தின் ஒரு பகுதியை மனுதாரர்/4ம் பிரதிவாதி சட்டவிரோதமாக விற்பனை வில்லங்கங்கள் செய்துவிட்டால் அசல் வழக்கின்



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.10 18:46:10 +0530

தன்மை மாறக்கூடியதாகவும், வழக்கு மூலம் மாறக்கூடியதாகவும் உள்ளது என்றும், மேலும், வழக்கில் தேவையற்ற சீர்திருத்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், அதன்மூலம் வழக்கு விசாரணை காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், மனுதாரர்/4 ம் பிரதிவாதி, வழக்கு தபசில் சொத்துக்களை 3 ம் தரப்பிற்கு விற்பனை வில்லங்கங்கள் செய்யப்போவதில்லை என சமூகம் நீதிமன்றத்தின் முன்பாக உறுதி கூறும் பட்சத்தில் மனுதாரரின் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிட இந்த எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், மனுதாரர் தனது மனுவில் என்ன காரணத்திற்காக வேண்டி அசல் ஆவணம் தேவைப்படுகிறது என்ற விவரத்தை குறிப்பிட்டு கூறப்படாத நிலையில், மனுதாரரின் இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரரின் இம்மனுவினை இந்த எதிர்மனுதாரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>

இம்மனுவானது, மனுதாரர்/4 ம் பிரதிவாதி, எதிர்வழக்குரையோடு தாக்கல் செய்துள்ள 29.11.2017 ம் தேதியிட்ட அசல் கிரைய ஆவணத்தை திரும்ப பெற வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கின் தன்மையின் படி, அசல் ஆவணம் தேவையில்லை என்றும், மேற்கண்ட கிரைய ஆவணத்தை வைத்து



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.10 18:46:17 +0530

மனுதாரர் கடன் பெறப்போவதாகவும், கடன் கொடுப்பவர் அசல் ஆவணத்தை பார்வையிட வேண்டி ஆவணத்தை கேட்பதாகவும், எனவே மேற்கண்ட ஆவணம் தேவைப்படுவதாகவும், நீதிமன்றம் உத்தரவிடும் போது மேற்கண்ட ஆவணத்தை சமர்ப்பிக்க தயாராக இருப்பதாகவும், எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**6)** 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் குறித்தானது என்பதால் தபசில் சொத்தின் ஒரு பகுதியை மனுதாரர்/4ம் பிரதிவாதி சட்டவிரோதமாக விற்பனை வில்லங்கங்கள் செய்துவிட்டால் அசல் வழக்கின் தன்மை மாறக்கூடியதாகவும், வழக்கு மூலம் மாறக்கூடியதாகவும் உள்ளது என்றும், மேலும், வழக்கில் தேவையற்ற சீர்திருத்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், அதன்மூலம் வழக்கு விசாரணை காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், மனுதாரர்/4ம் பிரதிவாதி, வழக்கு தபசில் சொத்துக்களை 3ம் தரப்பிற்கு விற்பனை வில்லங்கங்கள் செய்யப்போவதில்லை என சமூகம் நீதிமன்றத்தின் முன்பாக உறுதி கூறும் பட்சத்தில் மனுதாரரின் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிட இந்த எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் வாதிடப்பட்டது.

**7)** அசல் வழக்கு, வாதியால் பாகம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் மனுதாரர், அசல் வழக்கின் 4ம் பிரதிவாதி ஆவார். அவரால் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கு எழுவினா வனைய போடப்பட்டுள்ளது. மனுதாரர் தன்னுடைய மனுவில், அசல் வழக்கின் தன்மையின்



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.10 18:46:23 +0530

படி, அசல் ஆவணம் தேவையில்லை என்றும், மேற்கண்ட கிரைய ஆவணத்தை வைத்து மனுதாரர் கடன் பெறப்போவதாகவும், கடன் கொடுப்பவர் அசல் ஆவணத்தை பார்வையிட வேண்டி ஆவணத்தை கேட்பதாகவும், எனவே மேற்கண்ட ஆவணம் தேவைப்படுவதாகவும், நீதிமன்றம் உத்தரவிடும் போது மேற்கண்ட ஆவணத்தை சமர்ப்பிக்க தயாராக இருப்பதாகவும் சொல்லியுள்ளார். மனுதாரர்/4 ம் பிரதிவாதி, எதிர்வழக்குரையை தாக்கல் செய்யும் போது, மேற்கண்ட அசல் ஆவணத்தை எதிர்வழக்குரையோடு இரண்டாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளது தெரிகிறது. மேற்கண்ட ஆவணம் மனுதாரருக்கு கடன் பெறுவதற்காக தேவைப்படுவதாக சொல்லியுள்ளார். மேற்கண்ட நிலையில், மனுதாரர்/4 ம் பிரதிவாதி, மேற்கண்ட ஆவணத்தின் சான்றிட்ட நகலை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், மேலும், இந்நீதிமன்றம் உத்தரவிடும் போது, மேற்கண்ட ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், நிபந்தனையின் அடிப்படையில் மேற்கண்ட ஆவணத்தை மனுதாரர்/4 ம் பிரதிவாதிக்கு வழங்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**8)** முடிவாக, மனுதாரர்/4 ம் பிரதிவாதி, மேற்கண்ட ஆவணத்தின் சான்றிட்ட நகலை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், மேலும், இந்நீதிமன்றம் உத்தரவிடும் போது, மேற்கண்ட ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், நிபந்தனையின் அடிப்படையில் மேற்கண்ட ஆவணத்தை

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.04.10 18:46:28 +0530

மனுதாரர்/4 ம் பிரதிவாதிக்கு வழங்கலாம் என இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.10 18:46:33 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.10 18:46:38 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்,

நான்குநேரி

இ.ம.எண்.3/2026 இன்

அ.வ.எண்.113/2020

நேரிய/வரைவு உத்தரவு

நாள் - 10.04.2026